
# சப்ரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்

**கணிதம் - தரம் 01 / இரண்டாந் தவணை – வாரம் 9**

**தயாரிப்பு – இரத்தினபுரி கல்வி வலயம், ஆரம்பபிரிவு / ஆசிரிய ஆலோசகர் வீ.ராஜகுமாரி**


**<u>3.3 : 4 தொடக்கம் 6 வரையிலான எண்களை இனங்காண்பார்.</u>**

- 4, 5,6 பொருள்களின் / உருக்களின் எண்ணிக்கைக்குப் பொருத்தமான எண்குறிகளைக் கூறுவார். சரியாக எழுதுவார்.
- தேடிப் பெற்றுக் கொள்ளவேண்டியன – எண்ணிகள் (விதைகள் / பொத்தான்கள் / சிறிய கற்கள்), தாயக்கட்டை, மாதக்கலண்டரிலிருந்து 1 2 3 4 5 6 இலக்கங்களை வெட்டி எடுத்துக் கொள்க.


I. ஈர்க்கு ஒன்றை எடுத்து சூழலிலுள்ள பூக்களைப் பறித்து அதில் கோர்த்துக் கொள்ள வழிகாட்டுக.  ஒவ்வொன்றாக1, 2, 3, 4, 5, 6 என எண்ணி வாசிப்பதற்கு வழிப்படுத்துங்கள். திரும்பத்திரும்ப வாசிப்பதற்கு வழிப்படுத்துங்கள்.

II. 1, 2, 3, 4, 5, 6 என எழுதப்பட்ட தாயக்கட்டையை உருட்டுமாறு கூறுக. விழுந்த எண்ணை வாசித்து அதற்கேற்ப எண்ணிகளை எண்ணி எடுத்துக்காட்டுவதற்கு வழிப்படுத்துங்கள். (பல தடவைகள் இப் பயிற்சியை வழங்குங்கள்.)


III. உருக்களுக்குப் பொருத்தமான எண்ணிக்கைக்கு உரிய எண்குறியைப் பொருத்த வழிப்படுத்துங்கள்.




IV. பிள்ளையின் பெரிய சதுர றூள் கொண்ட பயிற்சிக்கொப்பியில் நான்கு சதுரங்கள் ஒரு இலக்கத்தை எழுதுவதற்கு ஏற்றவாறு வழிப்படுத்துங்கள்.




V. எண்குறியின் மீது சரியான திசையில் விரலைக் கொண்டு செல்ல வழிப்படுத்துங்கள். ●புள்ளியிலிருந்து ⊗ அடையாளம் வரையில் பல தடவைகள் இலக்கத்தின் மீது எழுதுவதற்கு வழிப்படுத்துங்கள். (பயிற்சிக் கொப்பியில் தினமும் 1 – 6 வரை பலமுறை எழுதி வாசிக்க வழிப்படுத்துங்கள்.)



- செயல் நூலில் தரப்பட்டுள்ள பயிற்சிகளை செய்து காட்டுவதற்கு வழிப்படுத்துங்கள்.